# புகழ்ச்சிக் கூட்டநற்செய்தி

2017 மார்கழி மாதம் 11ம் திகதி முதல் 17ம் திகதி வரை

## "இறை புத்திரத்தன்மை சங்கமமாகும்"

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக ( எசாயா 61.10)
    - "ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும். மலர்மாலை அணிந்த மணமகன் போலும் நகையால் அழகு படுத்தப்பட்ட மணமகள் போலும் விடுதலை என்னும் உடைகளை அவர் எனக்கு உடுத்தினார். நேர்மைஎன்னும் ஆடையை எனக்கு அணிவித்தார்."
    - ஒருகணம் அமைதியாக இறை ஆண்டவரின் மீட்பின் வாக்குறுதியை குறித்து விசுவசிப்போம். இக்கணத்தில் உங்களது எனது நிலை எதுவாக இருந்தாலும் அவரின் தயைகருணையும், எம்மீது வைத்திருக்கும் விசுவாசம் அசைவுறாது நிலைத்திருக்கின்றபடியினால் எமது உள்ளங்களை ஆண்டவர் பால் உளம்திறப்போம்.
    - அவர் இக்கணத்தில் மணமகளின் நகைகளைபோல் மீட்பின் ஆடையை எனக்கு உடுத்தி நேர்மை என்னும் ஆடையை எனக்கு அணிவித்தார்.
    - ஆண்டவருக்கு புகழ்ச்சி ஆகட்டும் புபுது பாடல் இல 84 "காலையும் மாலையும்…"

02. கடந்த வாரத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வோம்.
    - கடந்த வாரத்தில் நாம் வரவேற்பு மண்டபத்தைப் பற்றிக் கதைத்தோம். அங்கு வாரம் முழுவதும் கிறிஸ்துநாதரை நோக்குவதற்கு எமது கண்மனம் இதயத்தை உள்ளாக்கியபோது பரிசுத்த ஆவியானவர் எமக்கு என்ன கூறினார்? எமது மனித புத்திர தன்மைக்கு சாவாலாகிய விதம் …சங்கமமாக்கிக் கொள்வோம்.
    - அதேபோல் அன்றாட வாழ்வில் நிகழ்வுகள் வழியாக இறைஅன்பை அனுபவித்த விதத்தை பகிர்ந்துகொள்வோம். எனது மணித்தியாலம் செப வாழ்வை முன்கொண்டு

03. நாளுக்குரிய நற்செய்தி (இன்று நாம் சாலை அனுபவத்தைப் பற்றி தியானிப்போம்.)

i. எனது மணித்தியாலம் பயணத்தில் சாலை விஷேசமான அனுபவமாகும். ஏனென்றால் எமக்கு நினைத்து பார்க்கக் கூடிய அனைவருடனும் சங்கமமாகும் இடமாகும். …. ஐந்து விரல்களை உபயோகித்த எமக்கு ஒற்றுமையாக முடியுமான இடமாகும். அனைவரையும் மனதால் சந்திக்க முடியுமான இடமாகும்.

ii. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த வேதாகம பகுதிகயை வாசித்து சங்கமமாக தடையாக இருக்கின்ற எமது முக்கியமான தடை என்ன என்பதை கலந்துரையாடி பகிர்ந்து கொள்ளுங்கள்.
    - "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்….." (புனித மாற்கு 8:34)

04. வார்த்தையின் ஊழியருக்காக
    - தன்னலம் என்பது சுயநலமாகும். சுயநலம் என்பது நான் என்ற மமதையாகும். அதாவது எனது விருப்பம், நான் சரி என்று நினைத்துக் கொண்டு செயல்படுதல், எனது புத்திக்கு ஏற்ப மற்றவர்களுடன் ஒற்றமையாகுதல். அன்பு செய்வதற்கு, தயைகருணை செலுத்தவது மன்னிப்பு கொடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கான காரணங்களை கூறி சில சந்தர்ப்பங்களில் அதை நியாயப் படுத்துதல் அல்லது வைராக்கியத்துடன் உள்ளத்தில் இருளுடன், பாவ இருளுக்கு அலகையின் இருளுக்கு உள்ளாகுதல்.

- சிலுவை அன்பின் அடையாளமாகும் ஆழமான சங்கமமான நிலையை வெளிப்படுத்தும். கிறிஸ்து நாதரினுள் சிலுவை சுமந்துக் கொண்டு அவரைப் பின்பற்றுதல், கிறிஸ்துநாதரின் அன்பின் கட்டளையை நிறைவேற்றுதல். அவ்வாறாக செயல்படுபவர் மீட்பின் ஆடையை அணிந்து கொள்வார். நேர்மை என்னும் ஆடையை அணிந்து கொள்வார்.
- ஆகையால் சாலை அனுபவம் எம்மை சங்கமமாகுதலின் வழியாக இறை புத்திரதன்மைக்கு உயர்த்தும்.
- மனம்வருந்துதலின் அனுபவத்தின் வழியாக இறை புத்திரதன்மையின் அபிமானத்தைப் பற்றி மற்றவர்களுக்கு சாட்சி பகிர்வோம்.

05. இறுதி செபம்.–'எனது மணித்தியாலம்' பயணத்திற்கு தாகம் ஏற்படுமாறு செபிப்போம்.

புபுது பாடல் இல. 290 (சிங்கள பாடல்)

## *புகழ்ச்சிக் கூட்டநற்செய்தி*

2017 மார்கழி மாதம் 18ம் திகதி முதல் 24ம் திகதி வரை

**"அப்பா தந்தையானவரின் அரவணைப்பில் நாம் தங்கியிருப்போம்."**

01. ஆரம்பபாடல் புபுது பாடல இல. 294 "அழைத்து சென்றருள்வீர."

02.ஆரம்பப் புகழ்ச்சிக்காக

- வாரம் தோறும் நாம் இவ்வாறு ஒன்றிணைவது பலவீனமான பாவியான எமக்கு காட்டும் அதிவிசேட அன்பிற்கு இறை தந்தைக்கு நன்றி கூறி புகழ்ந்திடவே. ஆவரை மகிமைக்கு உள்ளாக்குவதற்கே. உண்மையாகவே எமக்கு இறைவனைப் புகழ்வதை விட வேறு என்ன செய்திட முடியும் எம் இறை தந்தைக்கு? படைப்பாளரின் அந்த படைப்பின் செயலில் தூசியினால் உருவாக்கப்பட்ட எம்மால் அவருக்கு என்ன செய்திட முடியும்? செய்ய முடியுமான ஒரே வேலை அவர் மகோன்னத இறைவன் என்று புகழ்வது மாத்திரமே.
- அனைத்து திருபலியிலும் "அவரைப் போற்றுவதும் புகழ்வதும் எமது கடமையும் மீட்பிற்குரிய செயலுமாகும்" என்று அறிக்கையிடுவது அதற்காகவே. பலவீனரான நாம் ஆயத்தமாவது அந்த கடமையும், தகுதியும் நீதியும் மீட்பிற்குரியவருமான இறைவனை புகழ்கின்ற செயலை உணர்ந்தே நிறைவெற்றுவதற்கேயாகும். அது வெறும் வார்த்தைகளாக இருக்கக் கூடாது. அதற்காக எம்மை வழி நடத்திட தூய ஆவியானவருக்கு இடமளிப்போம். அவர் அருளும் வரங்கள் கொடைகளை அனுபவித்தவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
- புபுது பாடல் இல103 "போற்றிப் பகழ்ந்திடுவோம்…."

03. நாளுக்குரிய நற்செய்தி

செபம் என்பது இறைவன் எமக்கு அன்பு செய்வதற்கு இடமளிப்பது என்பதை நாமறிவோம். செபப் பயணத்தில் கடக்க வேண்டிய படிமுறைகள் பல. அதாவது தெய்வீகமயமான வாசிப்பு (தியான வாசிப்பு) இரட்டை விழிப்புறுதல், வெளிமுற்றம், வரவேற்பறை, சாலை எனவிசேடமான இடங்கள் கடந்தவாறு தூய ஆவியானவர் எம்மை அழைத்துச் செல்லும் விதத்தை தியானித்தோம். நாம் கடந்து வந்த தரிப்பிடங்களில் விடுதலை

உணர்வுடன் அனைத்திலும் வெறுமையான உள்ளரங்கத்துடன் இறைவனின் அரவணைப்பிற்குள் நாம் சென்றிட விடுக்கும் அழைப்பாகும்.

- அந்த அழைப்பினை அருளியது தூய ஆவியானவரே. அப்பா தந்தையின் அரவணைப்பிற்குள் சென்றிட எமது சக்தியால் முடியாது என்பதைக் காணும் தூய ஆவியானவர் அப் பயணத்தில் செல்வது எமக்கு புரியாத, எம்மால் உண ரமுடியாது. இருப்பினும் தெரிந்தே நடைபெறுகின்ற அதி உன்னத கணத்திற்கு எம்மை அழைத்தச் செல்ல அவருக்கு இடமளிப்பது மாத்திரமே.
- சாலையில் நாம் அனுபவித்த இடைவிடாத புகழ்ச்சியில் உள்ளாகும் புனிதர்கள் மற்றும் வானதூதர்கள் படையினரின் மாபெரும் வந்தனை நமஸ்காரத்தினை பெற்றிடும் மகோன்னத இறைவனுக்கு வேறு எவ்வித சிந்தனைகள் உணர்வுகள் இன்றி அவரில் தங்குவோம். அந்த மகாமாட்சிமையைக் கண்போம். அவர் எம்மை அன்பு செய்திட இடமளிப்போம்.
- முகா புகழ்ச்சியில் கோஷம் எழும்புகையில் அவ்விடம் நானும் மகோன்ன தசர்வவல்லமை மிக்க இறைவனும் மாத்திரமே. எவ்வித பேச்சோ, வார்த்தையோ, சிந்தனையோ அங்கு இல்லாது, நான் அவரது அரவணைப்பில் தங்குவேன். ஓசை இல்லாவிடினும் நான் அங்கே யாரையும் காணாவிடினும், உணராவிடினும், நான் அங்கே அவரது அரவணைப்பில் தங்கியிருக்கிறேன். தங்கியிருக்கிறேன். தங்கியிருக்கிறேன்.

04. வாரம் முழுவதும்

- சில வேலைகளில் எனது மணித்தியாலத்தில் இல்லத்திற்குள் சென்றிட முடியாமல் போகலாம். இருப்பினும் அதை கைவிடுங்கள். அதற்கு ஆசையை ஏற்படுத்திக் கொண்டு நுழைவதற்கு தூய ஆவியானவரின் வரத்தினைக் கெட்டு செபியுங்கள்.
- குறிக்கப்பட்ட நேரத்தில், நியமிக்கப்பட்ட இடத்தில் எனது மணித்தியாலத்திற்கு உள்ளாகுங்கள். முடியுமான எல்லாநேரத்திலும் நற்கருணை நாதர் முன்னிலையில் தோன்றி நில்லுங்கள்.

05. இறுதி புகழ்ச்சி

புபுது பாடல் இல. 417 “உமது அரவணைப்பில்…”

## *புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி*

## *2017 மார்கழி மாதம் 25ம் திகதி முதல் 31ம் திகதி வரை*

## “ஆண்டவரில் பயணம் செய்வோம்.”

05. ஆரம்பப் புகழ்ச்சி: புபுது பாடல் இல. 05 “ஞானம் வீரம்….”

- புதுப்பிறப்படைந்த கிறிஸ்தவர்களாக நாம் பெற்றுள்ள விசேடமான பரிசுகளில் புகழ்ச்சியின் கொடை நாம் பெற்றுள்ள மிகச் சிறந்த பரிசாகும். இறைவனுக்கு புகழ்ச்சி செய்யும் அளவிற்கு, நாம் தகுதி பெற்றது எமது பாக்கியமே. இறைவனைப் புகழ முடியும் அவருக்கு அன்பு செய்கின்ற அந்த அன்பினை அனுபவிக்கின்றவர்களால் மாத்திரமே. கடந்த வாரம் முழுவதும் நாம் அனுபவித்த இறை அன்பினை முன்கொண்டு இன்றைய நாளில் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

- புபுது பாடல் இல 129 “பூரனமானவரே உம்மை…”

06. நாளுக்குரிய நற்செய்தி 1 தெசலோனிக்கர் 5:16-18

**“எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காக கிறிஸ்து இயேசு வழியாகச் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.”**

- கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில் இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது அவரோடு இனைந்து வாழும் வாழ்க்கை முறையையே. கிறிஸ்து ஆண்டவர் இறை தந்தையுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பிற்கு உள்ளாவதே. அவ்வாறு செய்ய வேண்டுமாயின் நாம் செப வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை கடந்த மாதம் முழுவதும் எங்களுக்குக் கிடைத்த வழிகாட்டல்கள் வழியாக தெளிவு படுத்திக் கொண்டோம். சேபம் என்பது எனக்கும் ஆண்டவருக்கும் இடையில் இருக்கும் அன்பின் தொடர்ப்பு.
- கடந்த 4 கிழமைகளில் உங்களுக்கு கிடைத்த வழிகாட்டளில் படி செபம் செய்ய முடிந்ததா? பகிர்ந்துக் கொள்ளுங்கள்.
- தேய்வீகமயமான வாசிப்பு (தியான வாசிப்பு) புனித யோவான் 14:16-18
  இரடடை விழிப்புறுதல்
  வெளிமுற்றம் 1
  வெளிமுற்றம் 2
  வரவேற்பறை
  சாலை
  இல்லம் அரவனைப்பு

  இது குறித்து உங்கள் அனுபவம் என்ன?
  - இதில் படிமுறை அல்லது பாதிக்கு உள்ளாக முடிந்ததா?
  - 45 நிமிடம் எனது மணித்தியாலத்திற்கு உள்ளாகவும்.

07. இறுதி செபம். –

புபுது பாடல் இல. 48 “தடடுகிறேன் கதவருகில்….”